NEW WAY OF BEING CHURCH

# newbec

19 மே 2024
பெந்தகோஸ்தே ஞாயிறு

**மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:**
ஆன்மீக ஒன்றிப்பில் பங்குகொள்ளும் உணர்வோடு தூதுரைத்தல், கொண்டாடுதல் மற்றும் செவிமடுத்தல் (மத்தேயு 5: 13-16)



மாதாந்திர கருப்பொருள்
திருஅவையாக குடும்ப வாழ்வை வலுப்படுத்துதல்

# தூய ஆவியார் திருஅவையின் ஆன்மா

அச்சத்தோடு ஒளிந்துமறைந்து வாழ்ந்த கூட்டத்திலிருந்து, தூய ஆவியார் அவர்களை கடவுளின் துணிவுள்ள பிள்ளைகளாக மாற்றினார். இன்று பெந்தகோஸ்தே பெருவிழா. நமது திருஅவையின் பிறந்தநாளைக் கொண்டாடுகின்றோம்.

இந்த நாளில் தான் அப்போஸ்தலர்கள் தூய ஆவியாரால் திருமுழுக்குப் பெற்றனர். அவர்கள் தூய ஆவியால் நிரப்பப்பட்டு, அங்கிருந்த அனைவருக்கும் விளங்கும் வகையில் பல்வேறு மொழிகளில் பேசத்தொடங்கினர். அங்கு கூடியிருந்த மக்கள், வானத்தின் கீழுள்ள ஒவ்வொரு நாட்டிலிருந்தும் வந்து சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அவரவர்களின் சொந்த மொழிகளில் கடவுளின் அற்புதங்களைப் பற்றிக் கேட்டவுடன் ஆச்சரியத்தில் மூழ்கினர். உண்மையில் கடவுளின் மீட்புத்திட்டத்தில் ஒருவரும் விடுபடவில்லை.

**குடும்பம் கிறிஸ்துவின் அன்பையும், உடனிருப்பையும் உலகுக்குக் காட்டவும், ஒளிவீசவும் அழைக்கப்படுகிறது.**
திருத்தந்தை 16 ஆம் பெனடிக்ட்







இரண்டாம் வாசகத்தில் தூய ஆவியில் நிறைந்த வாழ்வைப் பற்றி பவுல் அறிவுரை கூறுகிறார். தூய ஆவியார் நம் வாழ்வை வழிநடத்த அனுமதித்தால், நாம் நம்முடைய ஊனியல்புக்கு அடிபணிய மாட்டோம். நம்முடைய ஊனியல்பு ஆசைகள் நமக்கு அழிவைக் கொண்டுவருகிறது, மேலும் இதனால் விண்ணக அரசை உரிமையாக்கிக்கொள்ள முடியாது. அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், நம்பிக்கை, கனிவு, தன்னடக்கம் ஆகிய கனிகளைத் தூய ஆவியார் கொண்டுவருகிறார். இவற்றில் ஏதேனும் ஒன்று நம்மில் இருக்கிறதா? இறைவனின் ஆவி நம்மை வழிநடத்தி, நம்மில் குடியிருக்கும்போது, நாம் இயேசுவுக்கு உரியவர்கள். நாம் கடவுளின் அன்புக்குழந்தைகளாகவும், அவருடைய அரசின் இணை வாரிசுகளாகவும் மாறுகிறோம்.

தூய ஆவியார் தான் நம்முடைய பரிந்துரையாளர், சீடர்களுக்கு வாக்களித்த உண்மையின் ஆவியானவர்; இயேசு தாம் வாழ்ந்த காலத்தில் கற்பித்த அனைத்தையும் மீண்டும் நினைவூட்டிக் கற்பிப்பவர். இயேசு தந்தையிடமிருந்து வந்ததுபோல, நாம் பெற்றுக்கொள்ளும் தூய ஆவியாரும் தந்தையிடமிருந்து வருகிறார். **எனவே நாம் தூய திரித்துவத்தின் மறையுண்மையில் இணைக்கப்பட்டுள்ளோம். அவர்களோடு குடும்ப உறவைப் பகிர்ந்துகொள்கிறோம்.**

தூய ஆவியால் வலுவூட்டப் பெற்ற சீடர்கள் அனைவரும் அச்சமின்றி அனைத்து நாடுகளுக்கும் சென்று நற்செய்தியைப் பரப்பினார்கள். இது தொடக்க கால திருஅவையின் விரிவுக்கு வழிவகுத்தது. அனைத்துலக குடும்பங்களின் தினத்தை நினைவுகூரும் நாம், தூய ஆவியார் தந்தை, மகனோடு ஒன்றித்திருப்பதுபோல, நம் குடும்ப வாழ்விலும் நம்மைப் ஒன்றித்துப் பலப்படுத்துவார் என்று நாம் நம்பிக்கைக் கொள்வோம். மேலும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களோடு இணைந்து, கடவுளின் மீட்புத்திட்டத்தை வலிமையோடும், துணிவோடும் செய்திட தூய ஆவியார் உதவிட மன்றாடுவோம். தூய ஆவியாரே, உம் திருஅவையின் மீது உம் ஆவியை ஊதியருளும். திருஅவை நற்செய்தியை, மகிழ்ச்சியோடு அறிவிக்கவும், இதனால், உலகம் நம்பிக்கையின் மறுசீரமைப்பை சுவாசிக்கவும் செய்தருளும். ✠

**இன்றைய இறைவார்த்தை:**

திப: 2: 1-11

திபா: 104: 1,24,29-31,34

கலாத்தியர் 5: 16-25

யோ: 15: 26-27,16:12-15

INTERNAL CIRCULATION ONLY
BUL 20/2024

**Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org